මුදල්, ක්‍රමසම්පාදන සහ ආර්ථික සංවර්ධන අමාත්‍යාංශය
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
MINISTRY OF FINANCE, PLANNING AND ECONOMIC DEVELOPMENT

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01. ශ්‍රී ලංකාව | செயலகம், கொழும்பு 01. இலங்கை. | The Secretariat, Colombo 01. Sri Lanka.

කාර්යාලය / அலுவலகம் / Office: 011 - 2484500, 011 - 2484600, 011 - 2484700
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 - 2449823
වෙබ් අඩවිය / இணையத்தளம் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: DPMM/IPRM/01
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 17.03.2025

கருத்திட்ட கண்காணிப்பு சுற்றறிக்கை இல: 02/2025

சகல அமைச்சுக்களின் செயலாளர்கள்
திணைக்களத் தலைவர்கள்
சகல அரச கூட்டுத்தாபனங்கள் / நியதிச்சட்ட சபைகளின் தலைவர்கள்

**காலாண்டு அடிப்படையிலான ஒருங்கிணைந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் செயற்பாடுகள் மற்றும் வழிகாட்டுதல்கள் தொடர்பிலான சுற்றறிக்கை.**

## 1. அறிமுகம்

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழ் உள்ள கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பிரதான பணியாக அரச துறையின் அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களையும் கண்காணித்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் குறிப்பிடப்பட்ட நேரத்தினுள் எதிர்பார்க்கப்பட்ட அபிவிருத்தி பெறுபேறுகளை வழங்குவதை உறுதி செய்வதற்காக அவற்றினை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களை வசதியளித்தல் போன்றவை பிரதானமாக உள்ளது. மேலும் இப்பணி, “44ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டம் 2024” அறிமுகப்படுத்தப்பட்டதன் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இப் பிரதான பணிக்கமைவாக, நிரல் அமைச்சுக்களினால் செயற்படுத்தப்பட்ட பாரிய அளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம் குறித்த அறிக்கை காலாண்டு அடிப்படையில் செயற்றிறன் தொடர்பான தரவு மற்றும் தொடர்புடைய நிரல் அமைச்சுக்கள், கள அவதானிப்புகள் மற்றும் பிற நிறுவனங்களிலிருந்து பெறப்பட்ட உள்ளீடுகள் ஆகியவற்றால் வழங்கப்பட்ட தகவல்களை பகுப்பாய்வு செய்வதன் மூலம் நிதி அமைச்சர் ஊடாக அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. சில அபிவிருத்திக் கருத்திட்டங்கள் அவற்றின் எதிர்பார்க்கப்படும் நன்மைகளை உரிய நேரத்தில் பொதுமக்களுக்கு வழங்கத் தவறவிடப்பட்டுள்ளமையானது போதிய முன்னாயத்தமின்மை, பெறுகை நடைமுறை தொடர்பான தாமதங்கள், ஒப்பந்தக்காரர்களின் மந்தமான செயற்றிறன், மூன்றாம் தரப்பு ஒப்புதல்களினைப் பெறுவதில் தாமதங்கள், போதிய நிதி ஒதுக்கீடுகளின்மை, கடன் நிதியுதவிகள் இடைநிறுத்தம், கருத்திட்ட முகாமைத்துவக் குறைபாடுகள் போன்ற காரணங்களினால் ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, கருத்திட்டங்களின் செலவு அதிகரிப்பு மற்றும் காலம் நீடிப்பு எற்படுதல் என்பன பொதுவான அம்சங்களாவதுடன் மேலும் இதன் மூலம் பணத்திற்கான மதிப்பு எதிர்மறையான பாதிப்பினை

ஏற்படுத்துவதனுடன் புதிய பொது முதலீடுகளில் ஈடுபடுவதனை குறைவடையச் செய்யவும் இது வழிவகுக்கிறது.

இப் பின்னணியுடன், "2024 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டின் முடிவில் பாரிய அளவிலான அபிவிருத்திக் கருத்திட்டங்களின் முன்னேற்றம்" எனும் அமைச்சரவை விஞ்ஞாபனம் 24/2159/804/025 எனும் இலக்கத்துடன் 07.12.2024 ஆம் திகதி நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரால் சமர்ப்பிக்கப்பட்டு, ஒவ்வொரு நிரல் அமைச்சினாலும் நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்கள் ஒப்புக் கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் கருத்திட்டங்களிலிருந்து அதன் நோக்கத்திற்கு அமைவாக எதிர்பார்க்கப்படும் நன்மைகளை பொதுமக்களுக்கு வழங்குவதை உறுதி செய்வதற்காக, தொடர்புடைய நிரல் அமைச்சின் செயலாளர் மற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரின் இணைத்தலைமையுடனும் மற்றும் திறைசேரி அதிகாரிகளின் பங்கேற்புடனும் காலாண்டு அடிப்படையிலான ஒருங்கிணைந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் நடாத்துவதற்கு அமைச்சரவை ஒப்புதல் (06.01.2025) பெறப்பட்டுள்ளது. மேலும், காலாண்டு அடிப்படையிலான ஒருங்கிணைந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்களை நடாத்துவதற்கு தொடர்புடைய வழிகாட்டலை வெளியிடுவதற்கு அமைச்சரவை திறைசேரிச் செயலாளருக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஒப்புக் கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களின் நன்மைகளை வழங்க வசதியளிக்கும் வகையில் இந்த வழிகாட்டல் வெளியிடப்படுகின்றது.

**2. கூட்டத்தின் நோக்கம்**

காலாண்டு அடிப்படையிலான ஒருங்கிணைந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டங்கள் - Integrated Progress Review Meetings- (IPRMs) ஒப்புக் கொள்ளப்பட்ட கால எல்லைக்குள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களிலிருந்து தடையின்றி செயல்படுத்தப்படுவதையும் நன்மைகளை வழங்குவதையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன. செயற்றிறனை மீளாய்வு செய்வதற்கும், முன்னேற்றத்தின் இடைவெளிகளை அடையாளம் காண்பதற்கும், சவால்களைத் ஒழிப்பதற்கும் மற்றும் கருத்திட்ட இலக்குகளை வினைத்திறனாகவும் அடைய தகுந்த நடவடிக்கைகளை உருவாக்குவதற்கான ஒரு தளத்தை IPRMs வழங்குகிறது. கருத்திட்ட செயற்பாட்டுத் திட்டத்தின் வரையறுக்கப்பட்ட மைல்கற்களுக்கு ஏற்ப ஒவ்வொரு நிரல் அமைச்சும் செயற்படுத்தப்படுகின்ற அனைத்து அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் / கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்ய இவ் வழிகாட்டல் அனுமதிக்கிறது. மேலும் தீர்மானங்களை திறமையாகவும் வினைத்திறனாகவும் எடுப்பதிலும், விரைவான நடவடிக்கை எடுப்பதிலும் கருத்திட்டத்தின் பங்குதாரர்களை ஒன்றிணைக்கும் வாய்ப்பாகவும் IPRM அடையாளம் காணப்படுகிறது.

## 3. கூட்டத்திற்கான செயற்பாடுகள்

### 3.1 காலஅட்டவணை

- IPRM ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் தொடர்புடைய நிரல் அமைச்சுச் செயலாளரால் நடாத்தப்படும். (வருடத்திற்கு ஆகக் குறைந்தது இரண்டு கூட்டங்கள்)
- இவ்வாவணத்தில் இறுதியாக பிற்சேர்க்கையில் கொடுக்கப்பட்டுள்ள பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தில் தயாரிக்கப்பட்ட விளக்கக்காட்சி (Presentation) கூட்ட நிகழ்ச்சி நிரலுடன் அழைப்பிதழ்கள் மற்றும் பிற குறிப்பு ஆவணங்கள் (ஏதேனும் இருந்தால்) என்பன பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் தொடர்புடைய அமைச்சின் செயலாளரால் கூட்டத் திகதிக்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்பே தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

### 3.2 நிகழ்ச்சி நிரல் அமைப்பு

- பின்வருவன உள்ளடங்கலாக தெளிவான நிகழ்ச்சி நிரலை வரையறுத்தல் !
- வரவேற்பு மற்றும் அறிமுகம் (நிகழ்ச்சி நிரலை அறிவிக்கவும்)
- இறுதியாக நடைபெற்ற் நிகழ்ச்சியின் கூட்டறிக்கையினை மீளாய்வு செய்து, பரிந்துரை செய்யப்பட்டவற்றினை ஆராய்தல்.
- பிரதான செயற்றிறன் குறிகாட்டிகளுக்கு (Key Performance Indicator - KPI's) எதிராக ஒவ்வொரு கருத்திட்டத்தின் முன்னேற்றத்தின் மதிப்பாய்வு (KPI's) அவற்றின் இலக்குகள், நிதி பயன்பாட்டை மீளாய்வு செய்தல், அபாயங்கள் மற்றும் சிக்கல்கள் / சவால்களை அடையாளம் காணுதல் (குறிப்பு. விளக்கக்காட்சிகள் ஒவ்வொரு கருத்திட்ட பணிப்பாளர் நாயகம் / பொறுப்பான அதிகாரியால் வழங்கப்பட வேண்டும்)
- தகுந்த செயல்களுக்கான கலந்துரையாடல்கள் மற்றும் தீர்மானங்கள்
- முடிவுரை மற்றும் முன்னேற்பாட்டு வழிகள்

### 3.3 பங்கேற்பு (பங்குதாரர்களின் ஈடுபாடு)

தொடர்புடைய பங்குதாரர்களை அழைக்கவும், இதில்:

- திட்டமிடல், அபிவிருத்தி, பொறியியல், பெறுகை, நிர்வாகம், நிதி, உள்ளக கணக்காய்வு போன்றவற்றுக்கு பொறுப்பான நிரல் அமைச்சின் அதிகாரிகள்.
- திறைசேரி திணைக்களம் - கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு துறைகள், தேசிய திட்டமிடல், வெளிநாட்டு வளங்கள், தேசிய வரவு செலவுத் திட்டம், திறைசேரி செயற்பாடுகள், முகாமைத்துவ சேவைகள் மற்றும் ஏனைய தொடர்புடைய திறைசேரி திணைக்களங்கள்
- நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் மற்றும் கருத்திட்ட பணிப்பாளர்கள்.
- மூன்றாம் தரப்பு நிறுவனங்கள் / கருத்திட்ட பங்குதாரர்கள் (ஏற்புடையதாயின்).

### 3.4 செயலாளர் அலுவலக தொழிற்பாடு

சம்பந்தப்பட்ட நிரல் அமைச்சுச் செயலாளர், காலாண்டு அடிப்படையிலான IPRM தொடர்பான செயலக செயற்பாடுகளை திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்கு பொறுப்பான பணிப்பாளர் நாயகத்திற்கு வழங்குவார்.

**4. கூட்டத்தின் பின்னரான நடவடிக்கைகள்**

**4.1 கூட்ட அறிக்கை தயாரித்தல்**

இவ்வாவணத்தின் இறுதியில் வழங்கப்படும் பின் இணைப்புகளில் பரிந்துரைக்கப்பட்ட வடிவத்தின் படி கூட்ட அறிக்கைகளினைத் தயாரிப்பதற்கான நடவடிக்கைகளைச் செயலாளர் எடுப்பார். மேலும், திட்டமிடல் மற்றும் கண்காணிப்புக்கான பணிப்பாளர நாயகம் தகுந்த நேரத்தில் தயாரித்தல் மற்றும் அறிக்கைகளினை நிறைவு செய்வதற்கு பொறுப்பாவார். இணைத்தலைவராகப் பணியாற்றும் கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் ஒப்புதல் கூட்ட அறிக்கையை நிறைவு செய்வதற்கு முன்னர் பெறப்படும்.

இணைத் தலைவரின் ஒப்புதல் கிடைத்ததும், தொடர்புடைய அமைச்சுச் செயலாளர் கூட்டம் நடைபெற்று இரண்டு வாரங்களுக்கு தாமதமடையாமல் அனைத்து பங்குதாரர்களிடையேயும் கூட்டறிக்கைகளினை பகிர்ந்துகொள்வார்.

**4.2 பின்தொடர்தல் வழிமுறை**

ஒப்புக் கொள்ளப்பட்ட காலவரையறைக்குள் கூட்டத்தில் எடுத்துக்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் / நடவடிக்கைகளைச் செயற்படுத்துவதற்கு நியமிக்கப்பட்ட தொடர்புடைய நிறுவனம் பொறுப்பாகும், அதே நேரத்தில் அமைச்சின் செயலாளர் அவற்றின் செயற்பாட்டை மேற்பார்வையிடுவார். எனவே, பொறுப்பான அனைத்து பங்குதாரா்களும் வழக்கமான கண்காணிப்பு / பின்தொடர்தல் நடவடிக்கைகளை எடுப்பா்.

IPRM இல் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் / நடவடிக்கைகளை செயற்படுத்தும் முன்னேற்றம் குறித்து கருத்திட்ட பணிப்பாளர கருத்திட்டம் நடைமுறைப்படுத்தும் நிறுவனத்தின் தலைவர் ஊடாக நிரல் அமைசசின் செயலாளருக்கு / பொறுப்பான அதிகாரிகு தவறாமல் புதுப்பித்துக் கொள்வார்.

**5. தீர்க்கப்படாத பிரச்சினைகளைச் அறிக்கையிடுதல்**

நிரல் அமைச்சின் காலாண்டு அடிப்படையிலான IPRM அல்லது கருத்திட்ட வழிநடத்தல் குழு மட்டத்தில் தீர்க்கப்படாமல் இருக்கும் எந்தவொரு பிரச்சினையும் இல. 24/2313/804/037 மற்றும் 22. 12.2024 திகதியிலான அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் 30.12.2024 ஆம் திகதியிலான தீர்மானம் மூலமும் 44ஆம் இலக்க பொது நிதி முகாமைத்துவச் சட்டம் 2024 இன் 44 (3) பிரிவுக்கு ஏற்பவும அப்பிரச்சினைகளை பணிப்பாளர் நாயகம், கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்பு திணைக்களத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும். பின்னர் அமைக்கப்பட்ட ‘‘பொது முதலீட்டு கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கான அதிகாரிகள் குழுவிற்கு’’ அறிக்கையிடப்படும்.

ஒப்பம் / கே.எம். மஹிந்த சிறிவர்தன

திறைசேரி செயலாளர்

பிரதிகள்:

1. ஜனாதிபதியின் செயலாளர், ஜனாதிபதி செயலகம் - தயவுடன் தங்களின் தகவலுக்காக
2. கணக்காய்வாளர் நாயகம், தேசிய தணிக்கை அலுவலகம் - தயவுடன் தங்களின் தகவலுக்காக

**Appendix**

## 1. Template for preparing presentation (Power Point Presentation)

**Ministry of ……….**

**Project on ……….**

**Progress as of …….. 2025**

**Project on …………..**

| | | | |
|---|---|---|---|
| Original Project Duration | | Allocation for Current Year (Rs. Mn.) | |
| Time Extension (Months) | | Expenditure from Current Year Allocation (Rs. Mn.) | |
| Remaining Time (Months) | | Cumulative Physical Target (%) as of end of reviewed Quarter | |
| Source of Financing (Local/Foreign Loan Grant) | | Cumulative Physical Progress (%) as of end of reviewed Quarter | |
| Loan/Grant Amount (USD Mn) | | Target during the last 06 months (%) | |
| Amount to be disbursed (USD Mn.) | | Progress during last 06 months (%) | |
| Total Estimated Cost (Rs. Mn.) | | No. of PMU Staff | |
| Cumulative Expenditure (Rs. Mn.) | | Cost of PMU per month (Rs. Mn.) | |

**Achievement of Project Deliverables**

| Expected Outputs (Deliverables) | Cumulative Target (%) as of end of reviewed Quarter | Cumulative Achievement (%) as of end of reviewed Quarter |
|---|---|---|
| Component 1: …………. | ………. | ………… |
| Component 2: ………..... | ………. | ………… |
| Component 3: …………. | ………. | ………… |

**Performance of on-going Contracts**

| Name of the Contract | Agreed Date of Completion | Cumulative Target (%) as of end of reviewed Quarter | Cumulative Progress (%) as of end of reviewed Quarter |
|---|---|---|---|
| Package 1: | ……… | ……. | ……. |
| Package 2: | ……… | ……. | ……. |
| Package 3: | ……… | ……. | ……. |

**Status of Major Procurements**

| Name of the Procurement | Target Date of Awarding | Cumulative Target (%) as of end of reviewed Quarter | Cumulative Progress (%) as of end of reviewed quarter |
|---|---|---|---|
| 1. ………………. | ………… | ……… | ……… |
| 2. ………………. | ……….. | ……… | ……… |
| 3. ………………. | ……….. | ……… | ……… |

**Issues to be resolved**

| Issue | Issue prevailing from dd/mm/yyyy | Relevant Stakeholders |
|---|---|---|
| 1. | | |
| 2 | | |
| 3 | | |

## 2. Template for preparing meeting minutes

| Minutes of Quarter based Integrated Progress Review Meeting (No….) | | | |
|---|---|---|---|
| **Ministry of ……….** | | | |
| **Date and Time:** | | | |
| **Venue :** | | | |
| **Co-Chair :** | | | |
| (Include a brief note on the welcome and highlights from the co-chair) | | | |
| The decisions resulting from the deliberations are summarized below. | | | |
| **Project Name …….** | | | |
| **Matters Discussed** | **Decisions Taken** | **Responsibility** | **Time Frame** |
| | | | |
| **Project Name …….** | | | |
| **Matters Discussed** | **Decisions Taken** | **Responsibility** | **Time Frame** |
| | | | |
| Signature (Secretary to the Ministry) | | | |
| **List of Participants** | | | |
| 1……………………… | | | |
| 2……………………… | | | |
| 3. …………………… | | | |